# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 12.05.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 15394/F/2024**

திரு.ப.மூர்த்தி, -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
திட்ட உதவியாளர்,
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
கோயம்புத்தூர் மாவட்டம்-641 004.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.ப.மூர்த்தி, அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி.அ.பிரியஸ்ரீ, திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம்-641 004 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 22.08.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “உதவி இயக்குநர்/இணை இயக்குநர்(பொ) அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட 13.07.2024 நாளிட்ட நினைவூட்டல் மனு மீது பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை அரசாணை நிலை எண்.73, நாள் 11.06.2018-ல் குறித்துள்ள காலவரையறைக்குள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மனுதாரராகிய என்னால் வைக்கப்பட்ட கோரிக்கை ஏற்கப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா என்ற விவரத்தை தகவலாகத் தருக” என்பன போன்ற தகவல்களை 5 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம்-4 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ திட்ட உதவியாளர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம்-641 004 அவர்கள் ந.க.எண்.363/2024, நாள் 04.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கியுள்ளார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் வழங்காத காரணத்தால் 19.10.2024 தேதியிட்டு பிரிவு **19(1)**-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், 26.11.2024 தேதியிட்டு பிரிவு **19(3)**-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ந.க.எண்.363/2024, நாள் 04.10.2024 மற்றும் 10.12.2025 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டு ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முழுமையற்ற தகவல்களாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் பொது அதிகார அமைப்பால் வழங்கப்படவில்லை என்பதை இவ்வாணையம் பதிவு செய்து பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள இனங்களுக்கு திருத்திய/ சரியான தகவல்களை மனுதாரருக்கு <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- மனுதாரரின் 19.10.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்காகததற்காக அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ உதவி இயக்குநர்/இணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தரை மற்றும் முதல் தளம் கதவு எண்.50, FCI சாலை,காந்தி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் மாவட்டம்-641 004 அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய மேல்முறையீட்டு அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 15394/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
திட்ட உதவியாளர்,
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம்-641 004.

**அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர்(19.10.2024 தேதிய),**
**உதவி இயக்குநர்/இணை இயக்குநர்(பொ),**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**தரை மற்றும் முதல் தளம் கதவு எண்.50,**
**FCI சாலை,காந்தி மாநகர்,**
**கணபதி, கோயம்புத்தூர் மாவட்டம்-641 004.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.பி.மூர்த்தி,
1-88 தேவராயன்பாளையம்,
இச்சிப்பட்டி போஸ்ட்,
சோமனூர் வழி,
பல்லடம் தாலுகா,
திருப்பூர் மாவட்டம்-641 668.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-